**தலைப்பு 308 – தபால் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 308 –தபால்திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் தபால் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 04 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.
2018 தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.
இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும்

வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**மூலதனச் செலவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 03 மாவட்ட கணக்குஅலுவலகங்களின் தனித்தனி கணக்கு மீதிகளின் மொத்த தொகையானது கடட்டுப்பாட்டு கணக்குகளின் மீதிக்கு சமமாக இல்லாததுடன் அந்த ரூபா 2,111,326 மறைமீதியினை இனங்கண்டு சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கண்டி, நாரஹேன்பிட மாவட்ட கணக்கு அலுவலகங்களின் வித்தியாசம் இனங்கண்டு கொள்ளப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படுவதுடன் அனுராதபுரம், களுத்துறை, கொழும்பு தெற்கு ஆகிய மாவட்ட கணக்கு அலுவலகங்களின் வித்தியாசங்கள் சம்பந்தமாக பரீட்சித்துப் பார்த்து எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனத்தெரிவிக்கிறேன். | வித்தியாசத்தை இனங்கண்டு சரிசெய்தல் வேண்டும். |

### 2. நிதி மீளாய்வு

#### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நி.பி | தபால் கட்டணத்தை திருத்துதல், நாட்டில் | வருமன மதிப்பீட்டினை நடைமுறைச் |

| | | | |
|---|---|---|---|
| | 85(1) மற்றும் நி.பி 85(2) இன் பிரகாரம் வருமான மதிப்பீடும் திருத்திய வருமான மதிப்பீடும் நடைமுறைச் சாத்தியமான மற்றும் சரியான முறைமையில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் 31 வருமானத் தொகுதிகளின் சாதகமான முரண்கள் ரூபா 109,140 இலிருந்து ரூபா 214,474,405 வரையான வீச்சில் காணப்பட்டதுடன் 17 வருமானத் தொகுதிகளின் பாதகமான முரண்கள் ரூபா 150,636 இலிருந்து ரூபா 399,601,545 வரையான வீச்சில் காணப்பட்டது. | காணப்பட்ட பணவீக்க நிலைமை வெளிநாட்டு நாணயமாற்று வீதம் அதிகரித்தல் 2022 ஆம் ஆண்டில் இடம்பெற்ற மின்சார கட்டண அதிகரிப்புக்குநேரொத்ததாக சேவைக் கட்டணம் அதிகரித்தல், பாவனையாளர் நம்பிக்கை அதிகரித்தல் என்பன சாதகமான முரணுக்கு காரணமாகக் காட்டப்பட்டிருந்தது.<br><br>கொரோனா தொற்றுநோய் நிலைமையின் காரணமாக சேவைகளைப் பெற்றுக் கொண்ட சில நிறுவனங்கள் மூடப்பட்டமை கடதாசிகள் தட்டுப்பாடாகியதோடு மாற்று ஊடகங்களைப் பயன்படுத்தி நிறுவனங்கள் தமது சேவை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலானது பாதகமான முரணுக்கு காரணமாகக் காட்டப்பட்டிருந்தது. | சாத்தியமாகவும் சரியான முறைமையிலும் தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வண்டின் மற்றும் முன்னைய ஆண்டின் உள்ளபடியான வருமானத்தை ஒப்பீடு செய்த போது 06 வருமானத் தொகுதிகளை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது 35 சதவீதத்திற்கு மேற்பட்ட சதவீதத்தில் குறைவடைந்துள்ளது. | வெளிநாட்டு பார்சல்களை திருப்பி அனுப்புதல் குறைவடைதல் பரீட்சைகள் திணைக்களத்துடன் உடன்படிக்கையில் கையொப்பமிடுதல் துரிதப்படுத்தப்படாமையால் அந்த வருமானத்தை ஆண்டிற்குள் பெற்றுக்கொள்ள முடியாமை, தகவல் தொழில்நுட்ப முறைமையில் இடம்பெற்ற அபிவிருத்தி நடவடிக்கைகளின் காரணமாக 2020 ஆம் ஆண்டிற்கான ரூபா 10,537,178 வருமானம் 2021 ஆம் ஆண்டிற்கான வருமானத்தில் உள்ளடங்கியிருந்தமை,Business Reply Coupon வருமானமானது சுற்றுலா பயணிகளின் வருகை குறைவடைந்ததன் காரணமாக குறைவடைந்தமை,Hybrid Tele | வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | Mail பயன்பாடு குறைவடைந்தமை, ஏனைய மாற்றுவழிகளுக்கு பாவனையாளர்கள் தொடர்புபட்டமை, மற்றும் தபால் கவுன்டர்களின் மூலம் காப்புறுதி கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றிருக்காமை, சேவைக் கட்டண வருமானம் குறைவடைந்தமை மற்றும் பிரயாணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டதனால் தபாலின் மூலம் மருந்துகளைப் பெற்றுக்கொள்ளும் சேவையினை பயன்படுத்துதல் குறைவடைந்தமை என்பன வருமானம் குறைவடைந்தமைக்கு காரணமாக காட்டப்பட்டிருந்தது. | |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் நிலுவை வருமான மீதி ரூபா 93,411,706 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அந்த வருமானத்தை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. அவற்றில் ரூபா 75,243,443 தொகை 2019 ஆம் ஆண்டில் மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலிருந்து காணப்பட்டு வரும் நிலுவைப்பணமாக இருந்ததுடன் அதற்கான காலப்பகுப்பாய்வும் கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அதிவேக தபால் வசதிகளின் கீழான நிலுவை வருமானம் படிப்படியாக வங்கிவைப்பு மற்றும் பிணை முறிகளின் மூலம் அறவீடு செய்யப்படல், சுதந்திர தபால் வசதிகளின் கீழ் சேவைகளைப் பெற்றுக்கொண்ட அரசாங்க நிறுவனங்களுக்கு ஞாபகப்படுத்தல் கடிதங்களை சமர்ப்பிப்பதன் மூலம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான திரண்ட நிலுவைப் பணமானது அதற்கு முன்னைய சில ஆண்டுகளின் நிலுவை மீதிகளை கூட்டுச் சேர்ந்ததனால் சர்வதேச தபால் நிலுவை வருமானமும் உள்ளடங்கியுள்ளது. வருடாந்த கணக்குகளைத் தயாரிக்கும் போது அந்த நிலுவை மீதிகள் முன்கொண்டு செல்லப்பட்டதுடன் இக்கணக்கு நடவடிக்கைகளை கணனிமயப்படுத்துதல் அல்லது ஏனைய ஒரு System இன் மூலம் அமுல்ப்படுத்தப்படாததனால் 2022 ஆம் ஆண்டிலிருந்து கணக்கு நடவடிக்கைகள் | நிலுவை வருமானங்களை அறவீடு செய்வதற்கு முடியுமான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டியதுடன் காலப்பகுப்பாய்வும் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சர்வதேச கணக்குப் பிரிவின் மூலம் தயாரிக்கப்பட்ட கணனிமயப்படுத்திய Excel Sheet மென்பொருளுக்குள் உள்ளடக்கப்பட்டதனால் 2023 ஆம் ஆண்டிலிருந்து தொடரும் காலத்திற்கு காலப்பகுப்பாய்வு அறிக்கையினை வழங்கவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தயவாக தெரிவிக்கிறேன். | |
| (ஈ) | திணைக்களத்தினால் வெளிநாட்டு தபால்களை நிருவகிக்கும் நிறுவனங்களுக்கு 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவை வருமன அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரோதிலும் அந்த நிறுவனத்தினால் நிலுவை வருமான அறிக்கை அங்கீகரிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக 01 ஆண்டிலிருந்து 09 ஆண்டுகள் வரையான கால வீச்சில் பரவியிருந்த நிலுவை வருமானம் ரூபா 485,956,641 ஆகும். அந்த நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்காக திணைக்களத்தினால் போதியளவில் பலவந்தப்படுத்தல் மற்றும் நிலுவை வருமானத்தை அங்கீகரிக்காமைக்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்தலும் மேற்கொள்ளப்படவில்லை. | வெளிநாட்டு தபால்களை நிருவகிக்கும் நிறுவனங்களுக்கு கணக்குகளைச் சமர்ப்பித்து 02 மாதங்களுக்குள் அக்கணக்குகளை அங்கீகரித்து அல்லது திருத்தம் செய்து அல்லது நிராகரித்து அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் சில தபால்களை நிருவகிக்கும் நிறுவனங்களுக்கு உரிய காலத்திற்குள் ஞாபகப்படுத்தல்கள் செய்யப்பட்டிருந்தும் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத வருமான மீதிகள் காணப்பட்டன. | வெளிநாட்டு தபால்களை நிருவகிக்கும் நிறுவனங்களின் வருமானம் அங்கீகரிக்கப்படாமைக்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். |

## 2.2 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அதிக நிதி ஏற்பாடுகளை பெற்றுக்கொள்வதன் காரணமாக 07 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் 07 மூலதன செலவு விடயங்களில் மொத்தமாக ரூபா 254,420,910 சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது 14 | பிரயாணச் செலவுகள் மட்டுப்படுத்தப்படல், வழங்குனர்களினால் சீருடை வழங்குதல் இடம்பெற்றிருக்காமை,சேவை உடன்படிக்கையானது ஆண்டின் இறுதி வரை | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சில் பரவிக் காணப்பட்டது. | சமர்ப்பிக்கப்படாமை,செலவுகள் கட்டுப்படுத்தப்படல் அரசாங்கத்தின் கொள்கை மற்றும் தீர்மானத்தின் அடிப்படையில் வாகனங்களைக் கொள்வனவு செய்தல் இடம்பெற்றிருக்காமை, ஆதனக் கடன் வழங்குதல் வங்கிகளின் மூலம் கைவிடப்பட்டமை, மூலதனச் செலவுகளை மேற்கொள்ளுதல் கண்டிப்பாக மட்டுப்படுத்தப்படல், செயற்திட்ட நிர்மாணங்களுக்காக ஒப்பந்தங்களை வழங்குதலும் நாட்டில் காணப்பட்ட பொருளாதார சிக்கல், மூலப்பொருள் தட்டுப்பாடு, காலம் போதியதாக இல்லாமை என்பவற்றின் காரணமாக ஒப்பந்தக்காரர் ஒப்பந்தத்தை நிராகரித்தமை, வழங்குனருக்கு பெற்றுக்கொள்ளல் கடிதம் வழங்கப்பட்டிருந்தும் 2022 ஆம் ஆண்டின் இறுதிவரை அவர் உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு வருகைதராமை என்பன நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டதற்கு காரணமாக காட்டப்பட்டிருந்தது. | |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் நிதி ஏற்பாடு மாற்றம் செய்யப்பட்ட 02 செலவு விடயங்களில் ரூபா 21,617,958 நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | வழங்குனரினால் சீருடைகள் வழங்குதல் இடம்பெற்றிருக்காமை, சேவை செய்தல் உடன்படிக்கைகள் ஆண்டின் இறுதி வரை சமர்ப்பிக்கப்படாமை நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டமைக்கு காரணமாக காட்டப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் நிதி ஏற்பாட்டினை மாற்றம் செய்யும் போது முடியுமான அளவு சரியாக தேவைப்பாட்டினை இனங்காணுதல் வேண்டும். |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான ரூபா 16,035,709 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. | அனைத்துப் பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மாவட்ட கணக்கு அலுவகங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 250,276 தொகையான கடப்பாடுகளும் பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவு செய்ய முடியாதிருந்த வவுச்சர்களை தவறுதலாக Cigas நிகழ்ச்சித்திட்டத்தில் பொறுப்புக்களாக உள்ளடக்குவதற்கு முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனதயவாக தெரிவிக்கிறேன். | அனைத்து பொறுப்புக்களும் சரியாக இனங்காணப்படுதல் வேண்டும். |

**2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்த வேண்டியிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசியகணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் திணைக்களத்தின்’் நிதிக்கட்டுப்பாட்டிற்காக வினைதிறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது என கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய போதிலும் அம்மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதியை எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தயவாக தெரிவிக்கிறேன். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி<br><br>ரூபா | இணக்கமின்மை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5, 4.4 மற்றும் 4.5 ஆம் பிரிவுகள் | | மீளாய்வாண்டின் இறுதியில் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட, ஓய்வுபெற்ற, சேவையை கைவிட்டுச்சென்ற, மரணமடைந்த, மற்றும் ஏனைய 935 ஊழியர்களிடமிருந்து அறவிடவேண்டிய கடன் மீதி 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 21,117,666 தொகையை உள்ளடக்கி ரூபா 52,265,482ஆக இருந்த போதிலும் தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது அக்கடன் மமீதிகளை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5, 4.4 மற்றும் 4.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1938 இன் 01 ஆம் இலக்க தபால் அலுவலக பிணை நிதிய கட்டளைச் சட்டத்தின் 1978 திருத்தத்திற்கு | 144,334 | அதிகாரச் சட்டத்திற்கு முரணாக பல சந்தர்ப்பங்களில் ரூபா 144,334 பணம் செலுத்தப்பட்டிருந்தது. | உத்தேச பிணை கட்டளைச் சட்டத்தினை திருத்தம் செய்யும் நடவடிக்கைகளின் போது இதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை உள்ளடக்கி காணப்படுகின்ற குறைபாடுகளை சரிசெய்வதற்கு | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| இணங்க கட்டளைச் சட்டத்தின் 6(1) மற்றும் 6(2) ஆம் பிரிவுகள் | நடவடிக்கை எடுப்பதாகவும் தொலைபேசி செலவு மட்டுப்பாடுகளை மிகைத்திருந்த பணத்தை தபால் மா அதிபரின் அங்கீகாரத்துடன் பிணை நிதியத்திலிருந்து தீர்த்துவைப்பதாகவும் நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்திற்கு இணங்க ஒப்பந்த அடிப்படையில் இரண்டு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தயவாக தெரிவித்துக்கொள்கிறேன். |

### 2.6 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| வங்கிக்கு நேரடியாக செலவு வைக்கப்பட்ட ரூபா 5,651,599 பெறுவனவுகளுக்குரிய வருமானங்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பணத்தை இனங்கண்ட உடன் உரிய வருமான குறியீட்டின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். | வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2022 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 10 செயற்திட்டங்கள் 2022 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தன. | பெறுகைத் திட்டம் சம்பந்தமாக கருத்துரைகள் தரப்பட்டுள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மட்டக்களப்பு தபால் கட்டிடத் தொகுதியினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்கான நிதி ஏற்பாடக ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் பௌதீக செயல் முன்னேற்றம் 90 சதவீதமாகவும் செயல்முன்னேற்றம் 99.31 சதவீதமாகவும் காட்டப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்திற்குரிய 09 செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் உருவாகியிருந்த கொவிட் தொற்று நோயை முன்னிட்டும் நாட்டில் காணப்பட்ட பொருளாதார பிரச்சினை சூழ்நிலையை முன்னிட்டும் கொள்வனவு செய்தல் தாமதமடைந்தமையும், சீமெந்து போன்ற நிர்மாண பொருட்களின் தட்டுப்பாடும் வெளிநாட்டு நாணயமாற்று வீதம் அதிகரித்தன் காரணமாக உரிய காலத்திற்குள் நிர்மாணத்தை முடிவுறுத்துவதற்கு முடியாதிருந்தது. மேலதிக மதிப்பீட்டிற்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.2 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மட்டக்களப்பு தபால் கட்டிடத் தொகுதியினை நிர்மாணிப்பதற்காக பெறுமதி சேர் வரியுடன் ரூபா 343,739,916 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த நிர்மாணத்தை பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்தின் மூலம் மேற்கொள்வதற்கு 2019 மே 08 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இந்நிர்மாணங்கள் தொடர்பாக பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) இந்நிர்மாணத்தின் ஆலோசனை சேவைக் கட்டணத்திற்காக திணைக்களத்தினால் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் | மட்டக்களப்பு தபால் கட்டிடத் தொகுதியினை நிர்மாணிப்பதற்குரிய | திணைக்களத்தினால் உரிய செலவுக்காக நிதி ஏற்பாட்டினை |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினுள் ஆலோசனைக் கட்டணம் ரூபா 8,079,172 தொகை 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் செலுத்தப்பட்டிருந்தது. | ஆலோசனைக் கட்டணம் ஏற்கெனவே ஒதுக்கீடு செயதல் இடம்பெறவில்லை. | ஒதுக்கீடு செய்தல் வேண்டும். |
| (ii) | ஒப்பந்த உடன்படிக்கையின் 8.2 ஆம் பந்தியின் பிரகாரம் இந்த நிர்மாண வேலையை 2021 மார்ச் 12 அந் திகதி முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் 03 சந்தர்ப்பங்களில் திகதி நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க இந்த ஒப்பந்தம் 2022 திசெம்பர் 19 ஆந் திகதியளவில் பூரணப்படுத்தப்பட வேண்டியிருந்தும் 2023 பெப்பரவரி 15 ஆந் திகதி வரை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ஒப்பந்த காலத்தை நீடித்தலும் இடம்பெறவில்லை. | நாட்டில் உருவாகியிருந்த கொவிட் தொற்றுநொய் நிலைமையை முன்னிட்டு நாடு மூடப்பட்டிருந்த பின்னணியில் நிர்மாண வேலையை தொடர்ச்சியாக மேற்கொள்ள முடியாதிருந்தமை, பொலிஸ் ஊரங்குச் சட்டம், நாட்டில் காணப்பட்ட பொருளாதார சிக்கல் சூழ்நிலையை முன்னிட்டு கொள்வனவு செய்தல் தாமதமடைந்தமை, சீமெந்து போன்ற நிர்மாணப் பெருட்கள் தட்டுப்பாடு, நாயணமாற்று விகிதம் அதிகரித்தமையும் நிர்மாணப் பொருட்களின் விலைகள் அதிக அளவில் உயர்வடைந்தமையாலு ம் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்திற்கு உரிய காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்வதற்கு முடியாதிருந்தது. | ஒப்பந்ததை நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | மத்திய ஆலோசனை பணியகத்தால் செயற்திட்டத்திற்காக ரூபா 216,577,994 மேலதிக மதிபீட்டின் கீழ் நிர்மாண நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக 2023 | அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் வரைபு 2023 பெப்ரவரி 12 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை | முடியுமான அளவிற்கு பின் தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சனவரி 13 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.எவ்வாறாயினும் 2023 பெப்ரவரி 15 ஆந் திகதி வரை அமைச்ரவை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | என தயவாக தெரிவிக்கிறேன். | |

**3.3 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) தபால் திணைகளத்திற்காக ஒன்று ரூபா 615,915 வீதம் 60 தபால் அச்சிடல் இயந்திரங்களை ரூபா 36,954,900 கொள்வனவு செய்தல் தொடர்பாக பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) 2021 நவம்பர் 05 ஆந் திகதி கேள்வி மனுக்களை கோருவதற்காக வரையறுத்த ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனியின் தினமின டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளில் அறிவித்தல் வெளியிட்பட்டிருந்ததுடன் தினமின பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் பொருத்ததன்மை ஒப்பீடுகளின் கீழான 3(ஆ) பந்தியிலுள்ள விடயம் டெய்ஸி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட விடயமானது 3(ஆ) பந்தியிலுள்ள விடயங்களைவிட வேறுப்பட்டிருந்தது. | பொறுகைப் பிரிவினால் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்வி மனு கோரல் பத்திரமானது வரையறுத்த ஐக்கிய செய்திப் பத்திரிகைகள் கம்பனிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் ஐக்கிய செய்திப் பத்திரிகைகள் கம்பனியால் அந்த கேள்வி மனு கோரல் பத்திரத்தினை சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் மொழி பெயர்த்து அறிவித்தல் வெளியிடப்பட்டது என தெரிவிக்கிறேன். | கண்காணிப்பினை அதிகரித்தல் வேண்டும். |
| (ii) இயந்திரங்களை வழங்குவது தொடர்பான காலம் 2022 சனவரி 31 ஆந் திகதியிலிருந்து 60 | மிகுதி 50 தபால் முத்திரை இயந்திரங்களை வழங்குவது சம்பந்தமாக இரு தரப்பினர்களாலும் இணங்கிக் | அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படாத வகையில் தேவைப்பாட்டினை |

| | | | |
|---|---|---|---|
| | நாட்கள் வரையான காலத்தை 90 நாட்கள் வரை நீடிப்பதற்கு 2021 நவம்பர் 23 ஆந் திகதி நடைபெற்ற பெறுகைக் குழு அங்கீகாரம் கிடைத்திருந்தும் 2023 பெப்ரவரி 15 ஆந் திகதி வரை 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்த போதிலும் உரிய வழங்குனரினால் 10 தபால் முத்திரை இயந்திரங்கள் மாத்திரம் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. மிகுதி இயந்திரங்கள் 2023 ஏப்ரல் வரை கிடைத்திருக்கவில்லை. | கொண்ட உடன்படிக்கையில் குறிப்பிட்ட விலைகளின் பிரகாரம் வழங்கலினை மேற்கொள்வதற்காகவும் அதற்கு உரிய நிறுவனம் இணங்கணவில்லையாயின் செயலாற்றல் பிணைமுறியை விடுவிக்காமைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனதயவாக தெரிவிக்கிறேன். | நிறைவேற்றுதல் வேண்டும். |
| (iii) | கொள்வனவு கட்டளையின் பிரகாரம் 2022 மார்ச் 01 ஆந் திகதியளவில் 60 நபர்களைக் கொண்ட ஒரு குழுவிற்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது என குறிப்பிடப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதியான 2023 பெப்ரவரி 15 ஆந் திகதி வரை அவ்வாறான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்படவில்லை என தயவாக தெரிவிக்கிறேன். | தேவைப்பாட்டிற்கு இணங்க பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தினால் தேசிய போட்டி விலை முறைமைக்கு 450 டெஸ்க் டொப் கணனிகளையும் 450 UPS களையும் மற்றும் 08 லெப்டொப் கணனிகளையும் கொள்வனவு செய்வதற்கு 2021 ஒக்தோபர் 18 ஆந் திகதி ரூபா 151,632 செலவு செய்து பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. அந்த அறிவித்தலினையும் ஏனைய பெறுகைகள் தொடர்பான | பெறுகை அறிவித்தலின் பிரகாரம் ஒரு வழங்குனரைத் தெரிவு செய்யும் போது நடைமுறையில் ஏற்படுகின்ற சிக்கல்களைத் திருத்திக்கொள்வதற்கு மீண்டும் திருத்திய பெறுகை அறிவித்தல் வெளியிடப்பட்டது எனத் தெரிவிக்கிறேன்.<br><br>அரசாங்க நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் | அனைத்து தேவைப்பாடுகளையும் நிறைவேற்றும் வகையில் பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்படுதல் வேண்டும். பெறுகை வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| அறிவித்தலினையும் பிழையாக மேற்கொண்டதன் காரணமாக அந்த அறிவித்தலில் இருந்த ‘‘சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது” என்பதனை நீக்குவதற்காக மீண்டும் பத்திரிகை அறிவித்தலினை வெளியிடுவதற்காக ரூபா 59,413 மேலதிக செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் போது 02 நிறுவனங்கள் அந்த 02 நிறுவனங்களுக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது என்பதற்கான கடிதத்ததை சமர்ப்பித்திருந்தது. அது தொடர்பாக அரசாங்க நிதித் திணைக்களத்திடம் விசாரிக்கப்பட்டிருந்தும் அத்திணைக்களத்தினால் அது தொடர்பாக அனுப்பிய கடிதம் கோவைகளில் காணப்படவில்லை. அக்கடிதத்தினை அடிப்படையாகக் கொண்டு அந்த நிறுவனங்களின் கேள்வி மனு தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. அரசாங்க நிதித் திணைக்களத்தினால் அனுப்பிய கடிதம் கோவைகளில் இல்லாமைக்கான காரணம் தொடர்பாக கணக்காய்வு செய்வதற்கு முடியாதிருந்தது. | விசாரிக்கப்பட்டிருந்தும் அக்கடிதத்திற்கான பதில் கிடைக்காததனால் அத்திணைக்களத்திடம் வாய்மொழி மூலம் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் அதற்கிணங்க கேள்வி மதிப்பீட்டு வரையறைகளில் உடன்படிக்கை செய்த நிறுவனங்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதில்லை என தயவாக தெரிவிக்கிறேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**கணக்காய்வு அவதானிப்புக்கள்** **கணக்கீட்டு** **சிபாரிசுகள்**

| | | உத்தியோகத்தரின் கருத்துரைகள் | |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வசாண்டின் இறுதிவரை முறைப்படியாக பொறுப்பேற்க்கப்படாது 565 தபால் அலுவலகங்கள் காணப்பட்டதுடன் தபால் திணைக்களத்திடம் காணிகள் இருந்தும் அலுவலக கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 08 தபால் அலுவலகங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடங்களில் செயற்பட்டு வருகின்றன. | காணிகளைப் பொறுப்பேற்கும் நடவடிக்கைகளை தரிதப்படுத்துவதற்காக தற்பொழுது அனைத்து பிரதி தபால் மா அதிபர் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் உரிய நிறுவனங்களுக்கு காணிகளை ஒப்படைக்கும் நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ளுமாறு வேண்டுதல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கிறேன். காணிகள் பொறுப்பேற்க்கப்பட்ட போதிலும் அக்காணிகளில் புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான நிதி ஏற்பாடு பொதுத் திறைசேரியின் மூலம் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருக்காததனால் அக்காணிகள் குறைப் பயன்பாட்டில் காணப்படுகின்றன எனக் குறிப்பிடுகிறேன் அதனால் அந்த அலுவலகங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டிடங்களில் ஸ்தாபிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டியுள்ளது என தெரிவிக்கிறேன். | 565 தபால் அலுவலகங்கள் முறைப்படியாக பொறுப்பேற்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் 43 தபால் அலுவலகங்கள்மற்றும் 02 உத்தியோகபூர்வ இல்லங்களின் 83,152.61 சதுர மீற்றர் அளவிலான (3,288.66 பேச்சர்ஸ் ) குறைவாக பயன்படுத்தப்படுகின்ற காணி காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. | நாடு தீவிர நிதிச்சிக்கலுக்கு முகங்கொடுத்துள்ள காலப்பகுதியில் தபால் திணைக்களத்திற்கு முறைப்படியாக ஒப்படைக்கப்பட்ட காணிகளில் புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக அரசாங்க நிதியை நேரடியாக முதலீடு செய்வதற்கான இயலுமை காணப்படவில்லை என்பதனால் தபால் திணைக்களத்தின் உரிமையை பாதுகாக்கும் வகையில் ஒரு நடைமுறை | குறைவாக பயன்படுத்தும் காணிகளுக்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பின்பற்றப்பட்டு புதிய கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு குறைவாக பயன்படுத்தும் 17 காணிகள் பிரேரிக்கப்பட்டு அமைச்சரவை விஞ்ஞாபனம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. பல காணிகள் தபால் அலுவலகத்திடம் காணப்படுகின்ற போதிலும் அக்காணிகளில் வேறு வருமானங்கள் உழைக்கும் செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கான இயலுமை காணப்படுகின்றது எனத் தெரிவிக்கிறேன். | |
| (இ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள எனினும் மதிப்பீடு செய்யப்படாத காணிகளின் அளவு 63 ஆகும். அவ்வாறு பொறுப்பேற்று மதிப்பீடு செய்யப்படாது 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் காணிகளின் அளவு 30 ஆகும். பொறுப்பேற்று மதிப்பீடு செய்யப்படாது 10 ஆண்டுகளுக்கும் 35 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்திற்குள் பொறுப்பேற்கப்பட்ட காணிகள் 15 மற்றும் பொறுப்பேற்க்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படாது 02 ஆண்டுகளுக்கு குறைந்த காலமாக காணப்பட்டு வரும் காணிகள் 30 ஆகும். 03 காணிகள் பொறுப்பேற்கப்பட்ட திகதி எப்போது என்பது திணைக்களத்திற்க தேடிக்கண்டு பிடிக்க முடியாதிருந்தது. | பல ஆவணங்கள் தபால் தலைமையகத்தின் கட்டிட பிரிவினைப் போல பிராந்திய தபால் அத்தியட்சகர் அலுவலகங்களிலும் இல்லாமையின் காரணமாக இதுவரை மதிப்பீட்டிற்காக அனுப்பிவைக்க முடியாதுள்ளது. | தபால் திணைக்களத்திற்குரிய காணிகளை முறைப்படியாக இனங்காண்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் 12 தபால் மற்றும் உபதபால் அலுவலகங்களின் காணிகளை பொறுப்பேற்றல் மற்றும் அறவீடு செய்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 371,940 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2023 மார்ச் 28 ஆந் திகதி வரை அக்காணிகளைப் பொறுப்பேற்கும் நடவடிக்கை முடிவடைந்திருக்கவில்லை. | காணிகளைச் சவீகரிக்கும் நடைமுறையின் கீழ் ஒரு காணியை அளவீடு செய்ததன் பின்னர் அதன் திட்டவரைபடத்தினை காணி ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கும் நடவடிக்கை உரிய பிரதேச செயலாளர்களால் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த நிறுவனங்களில் காணப்படுகின்ற வினைதிறன மற்றும் சட்டரீதியான நிலைமையின் அடிப்படையில் முறைப்படியாக பொறுப்பேற்கம் நடவடிக்கைக்கு சில காலம் எடுக்கும் எனத் தெரிவிக்கிறேன். | 12 தபால் அலுவலகங்கள் மற்றும் உபதபால் அலுவலகங்களின் காணிகளை பொறுப்பேற்கும் நடவடிக்கை முடிவுறுத்தப்படுதல் வேண்டும். |
| (உ) | தலைமை அலுவலகத்தினால் பேணப்பட்டு வருகின்ற அறிக்கைமற்றும் பிரதி தபால் மா அதிபரினால் பேணப்பட்டு வருகின்ற அறிக்கையின் பிரகாரம் தபால் அலுவலகங்களின் காணிகளின் உரிமையில் மாற்றங்கள் காணப்படுகின்றன என்பது அவதானிக்கப்பட்டது. | தபால் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற தபால் அலுவலகங்கள் மற்றும் உபதபால் அலுவலகங்களின் காணிகளை முறைப்படியாக பொறுப்பேற்றதன் பின்னர் வழங்கப்படுகின்ற சான்றிதழ் பத்திரம் மற்றும் காணி சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் கீழ் பயன்படுத்துவதற்கான உரிமையாக வழங்கப்பட்டுள்ள ஆவணங்களை உள்ளடக்கிய கோவைகள் கட்டிடங்கள் மற்றும் காணிகள் பிரிவில் காணப்படுகின்றது. மேலும் அவற்றை முறைப்படியாகப் பொறுப்பேற்கப்பட்ட அலுவலகங்களில் முறைப்படியாக பொறுப்பேற்றல் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் தபால் தலைமை அலுவலகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | தரவு முறைமையை சரியாக தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | தபால் மா அதிபரின் பெயரில் பதிவுசெய்துள்ள வாகனங்கள் சம்பந்தமாக தபால் திணைக்களத்திடமிருந்தும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை ஒப்பீடு செய்த போது 42 வாகனங்கள் சம்பந்தமான தகவல்கள் திணைக்களத்திடம் இல்லாதிருந்ததுடன் 60 சிறீ 7256 ஆம் இலக்க பஸ் பாவனையிலிருந்து நிக்கப்பட்டிருந்தும் அதற்காக தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தபால் மா அதிபரின் பெயரில் பதிவு செய்துள்ள 42 வாகனங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து பார்ப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவின் மூலம் அது சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 60 சிறீ 7256 ஆம் இலக்க பஸ் முத்திரை அலுவலகத்தின் காட்சிப்படுத்தல் வாகனமாக பயன்படுத்துவதற்காக திருத்தம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என தயவாக தெரிவிக்கிறேன். | தபால்மா அதிபரின் பெயரில் பதிவு செய்துள்ள அனைத்து வாகனங்களும் இனங்காணப்படல் வேண்டும் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பஸ்ஸிற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 5 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய ரூபா 578,171 தொகை மற்றும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்குரிய ரூபா 14,671,180 தொகையான நட்டங்கள் மற்றும் சேதங்களின் மொத்தப் பெறுமதியான ரூபா 15,249,351 நட்டத்தினை இன்னும் அறவீடு செய்வதற்கு திணைக்களத்தினால் முடியாதிருந்தது. | நிதி மோசடி, களவு எடுத்தல், கொள்ளையடித்தல் முதலியவை சம்பந்தமான பொலிஸ் அறிக்கை, புலனாய்வு அறிக்கை முதலியவற்றை வழங்குவதற்கு உள்ள சிக்கல், (சில நட்டங்கள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்டதன் காரணமாக பயங்கரவாத நடவடிக்கை இராணுவ செயற்பாடு போன்ற விடயங்களின் அடிப்படையில் தேவையான தகவல்கள் காணாமல் போயிருத்தல்) வழக்கு விசாரிக்கப்படல் போன்ற விடயங்களின் காரணமாக நட்டத்தை பதிவழிப்பதற்கு தாமதமடைந்தமைக்கான காரணமாக இருந்தது என தெரிவிக்கிறேன். | நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| களுத்துறை மாவட்ட கணக்கு அலுவலகத்தில் 09 ஆண்டுகளுக்கு முன்னர் ரூபா 1,295,400 பெறுமதியான நிதி மோசடி வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 வரை அவற்றில் ரூபா 1,145,850 மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அது தொடர்பான புலனாய்வு தற்பொழுது இடம்பெற்றுவருகின்றது. | திணைக்களத்தினால் புலனாய்வு நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்காக துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. மனிதவளங்கள் முகாமைத்துவம்**

**4.1 இணைத்துக்கொள்ளப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் பிரதி தபால் மா அதிபர் பதவிக்காக திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 09 ஆக இருந்த பேதிலும் உள்ளபடியான பதவியினர் 11 ஆக இருந்ததனால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையினை மிகைத்து 02பிரதி தபால் மா அதிபர்கள் சேர்த்தக்கொள்ளப்பட்டிருந்தனர்.<br>திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதி தபால் மா அதிபர் பதவிகள் 2020 சனவரி 09 ஆந் திகதியளவில் பூரணப்படுத்தப்பட்டிரந்தும் எதுவித அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்படாது 2021 திசெம்பர் 11 மற்றும் 2022 ஏப்ரல் 27 ஆந் திகதிகளில் திணைக்களத்தின் பிரதி தபால் மா அதிபர் பதவிகளுக்கு இரண்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | இலலங்கை நிருவாக சேவையிலுள்ள பதவிகளுக்கு தகமைபெற்ற உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்காததனால் அந்த 02 பதவிகளுக்காக திணைக்களத்தின் தகமைபெற்ற உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த வேண்டியிருந்தது. அதற்கிணங்க பதவிகளின் எண்ணிக்கை 11 ஆகியுள்ளது என தெரிவிக்கிறேன். | திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கைக்கு இணங்க ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |